**PPSC Circular No : AD/PD/AP&H/2024(3)**

## <u>கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2024</u>

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்காக இலங்கை சோசலிச குடியரசின் 1840/51 ஆம் இலக்க 13.12.2013 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் சேவை பிரமாண குறிப்பில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக, அகில இலங்கை ரீதியில் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் I சார்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **27.05.2024** ஆகும்.

**02. ஆட்சேர்ப்பு முறை:**

2.1. இந்த விளம்பரத்துக்கு அமைவாக விண்ணப்பிக்கும் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் I சார்ந்த அலுவலர்கள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பூர்த்தி செய்து மற்றும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைவாக விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரி இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.

2.2. **தகைமைகள்:**

**2.2.1** இலங்கை கால்நடை வைத்திய விஞ்ஞான பட்டம் பெற்றுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் I ஆம் தரத்தில் 3 வருட வலுவான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல். (தகைமைகளை பூரணப்படுத்தியமைக்குரிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும்)

குறிப்பு : **அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவிக்கு உரித்தான எல்லாத் தகைமைகளையும் 27.05.2024 ஆம் திகதியோ அல்லது அத்திகதிக்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.**

**03. விண்ணப்பிக்கும் முறை :**

3.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிய குறியீட்டு இலக்கமின்றியும், உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இவ் உள்ளக சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.3. விண்ணப்பப்படிவமானது திணைக்களத்தலைவர், அமைச்சின் செயலாளர் மற்றும் கால்நடை உற்பத்தி பணிப்பாளர் நாயகத்தின் சிபார்சுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். மாகாண சபையில் கடமையாற்றும் அலுவலர்கள் உரிய மாகாண பிரதம செயலாளர்/ மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களது சிபார்சுடன் அனுப்பி வைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் அதற்கு விடுவிப்பதற்கு முடியும் என குறிப்பிடப்பட்டுள்ள பகுதி மிகச்சரியாக பூர்த்தி செய்து அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

3.4 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **27.05.2024** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனால் அதற்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை

3.5 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் குறியீட்டு இலக்கம் **AD/PD/AP&H/2024(3)** என்பதை குறிப்பிடுவதோடு **“கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு – 2024”** என குறிப்பிடுதல் வேண்டும்.

3.6. மேலே பந்தி இல.2.1 இல் குறிப்பிட்டமைக்கு அமைவாக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை **27.05.2024** ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியமைக்குரிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளளோர் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிடப்பட்ட கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர். உரிய கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதனால் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது. **தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது இப் பதவிக்கு விண்ணப்பித்தல் தவறொன்றாக கருதப்படும்.**

**04. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதாவது ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**05. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் முன்னரோ கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீசாத்துரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் அல்லது வழங்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே வழங்காமல் விடும் எச்சந்தர்ப்பத்திலும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியும் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

**06. கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை :**

**புள்ளிகள் வழங்கப்படும் முறை**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|
| (i) சேவைமூப்பு | 40 |
| (ii) திறமை | 60 |
| முழு புள்ளிகள் | 100 |

கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் திட்டம் “இணைப்பு – I” இல் வழங்கப்பட்டுள்ளது.

**07.** கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**08**. கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையானது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நடாத்தப்படும்.

**09**. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் அத் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களில் சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

**10**. இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இனால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இனால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் / பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இன் ஆலோசனையின் படி கிழக்கு மாகாண மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

**ஆ. மன்சூர்**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம், திருகோணமலை.

திகதி – 07.05.2024